# வாக்கியம் அமைத்தல்

## ( ச - சி )

1. சங்கு

தூத்துக்குடியில் முருகன் சங்கு வாங்கினான்.

2. சரக்கு

கடைக்காரர் கடைக்கு தேவையான சரக்குகளை வாங்கினார்.

3. சட்டை

குட்டி பையன் சட்டை போட்டான்.

4. சரி

விக்ரம் கேள்விக்கு சரியான பதில் சொன்னான்.

5. சத்தம்

குழந்தை சத்தம் கேட்டு விழித்தது.

6. சந்தை

தாத்தாவுடன் சந்தைக்குச் சென்றேன்.

7. சக்கரம்

எனது மிதிவண்டியின் சக்கரம் பழுதடைந்துவிட்டது.

8. சரிவு

ஊட்டியில் நிலசரிவு ஏற்பட்டுள்ளது.

9. சட்டம்

சட்டம் தன் கடமையைச் செய்யும்.

10. சண்டை

யாரிடமும் சண்டை போடக் கூடாது.

11. சந்தனம்

எங்கள் வீட்டில் சந்தன மரம் உள்ளது.

12. சகோதரன்

என் சகோதரன் ஐந்தாம் வகுப்பு படிக்கிறான்.

13. சந்திரன்

சந்திரனுக்கு சொந்த ஒளி கிடையாது.

14. சக்கரை

எங்கள் ஊரில் சக்கரை ஆலை உள்ளது.

15. சாலை

சாலையில் ஓரமாக நடந்து செல்ல வேண்டும்.

16. சாட்டை

வண்டிக்காரர் மாட்டை சாட்டை வைத்து அடித்தார்.

17. சாவி

பூட்டுக்கு சாவி எங்கே ?

18. சாணம்.

சாண உரம் வயலுக்கு நல்லது.

Notebook Writer

19. சாப்பாடு

குமார் சைவ சாப்பாடு சாப்பிட்டான்.

20. சிரிப்பு

குழந்தையின் சிரிப்பு அனைவரையும் கவரும்.

Notebook Writer
Notebook Writer
Notebook Writer